2nd February 1966]

கனம் திரு. பூ. கக்கன் : இந்திய அரசாங்கம் கொடுக்கவில்லை. டெல்லியில் பசுங்கன்றுகளையும் தருகிறார்கள். இதற்காக மத்திய சர்க்காரிடத்தில் அப்ளிகேஷன் போடலாம். சில அங்கத்தினர்கள் பசுங்கன்றுகளையும் கொண்டு வந்திருக்கிறார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல் : ஒரு முர்ரா எருமைக்கு 2,000 ரூபாய் விலையாகிறது. நம்முடைய அரசாங்கம் நமக்கு கிடைக்கிற நல்ல சந்தர்ப்பங்களை எல்லாம் இழக்காது என்று நம்புகிறேன். அந்த முறையில் இனமாக கிடைத்த இந்த கன்றுகளில் எத்தனை கன்றுகளை நமது மாதவரம் பால் பண்ணையில் விட்டு வளர்த்து வருகிறார்கள் என்பதை அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடமில்லை.

திரு. கி. இரா. சம்பந்தம் : நான் கேட்டது, பொதுவாக முர்ரா எருமைகள் சிக்கிரத்தில் பலன்படுவதில்லை என்று சொல்லப்படுவது உண்மையா? இதைப்பற்றி சர்க்காருக்கு தகவல் கொடுக்கப் பட்டிருக்கிறதா? அப்படியென்றால் சீக்கிரத்தில் பலன் கொடுப் பதற்கு செயற்கை முறையில் ஏதாவது நடவடிக்கை எடுக்க சர்க்கார் உத்தேசித்திருக்கிறதா? என்பதுதான்.

MR. SPEAKER : So, the Hon. Member's question is not about these calves.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, இந்திய அரசாங்கத் திலிருந்து, ஆண்டு ஒன்றுக்கு எத்தனை கன்றுகள் இனமாக நமக்கு கிடைக்கின்றன என்பதை அறியலாமா?

கனம் திரு. பூ. கக்கன் : இந்திய அரசாங்கத்திலிருந்து கிடைக்க வில்லை. டெல்லியில் தெருவில் கூட பல கன்றுகள் திரிந்து கொண் டிருக்கின்றன. அவைகளைப் பிடித்துத் தருகிறார்கள். பார்லி மெண்ட் மெம்பர்கள் பலர் இவ்வாறு கொண்டு வந்திருக்கிறார்கள். இப்போது நமக்கு கிடைத்தது, பம்பாய் மில்க் யூனியனிலிருந்து இனமாக கொடுக்கப்பட்டது.

வேலூரில் மாணவ, மாணவிகளுக்குத் தனித்தனி விடுதிகள்

*55 **கேள்வி.—திரு. ர. ஜீவரத்னம் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லா வேலூரில் மாணவர், மாணவிகளுக் கௌத் தனித்தனியே ஹஸ்டல்கள் கட்டும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா?

(இ) ஆம் என்றால், எப்பொழுது வேலை துவக்கப்படும்?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(*a*) No, Sir.

(*b*) Does not arise.